# மதுரை மாவட்டம் Date:24/03/2026

முழு ஆண்டு பொதுத் தேர்வு மார்ச் 2026 ATMT

**11** வகுப்பு | **வணிகவியல்**

நேரம் : 3.00 மணி | பகுதி I | மதிப்பெண் : 90

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20X1=20

1. தொழிலின் முதன்மைக் குறிக்கோள்
(அ) இலாபம் ஈட்டுதல் (ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்
(இ) சிறப்புத் தேர்ச்சி (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2. இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
(அ) போக்குவரத்து (ஆ) பண்டகசாலை (இ) விற்பனையாளர் (ஈ) காப்பீடு

3. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
(அ) தனியாள் வணிகம் (ஆ) கூட்டாண்மை (இ) கூட்டுறவு சங்கம் (ஈ) நிறுமம்

4. ராக்டேல் சொசைட்டியை தோற்றுவித்தவர் ____
(அ) ராபர்ட் ஓவென் (ஆ) H.C. கால்வெர்ட் (இ) டால்மாக்கி (ஈ) லம்பேர்ட்

5. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக_____ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(அ) ஆவணம் (ஆ) தனியார் (இ) குளிர்பதன (ஈ) கூட்டுறவு

6. மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?
(அ) தொடர்வண்டி (ஆ) சாலை (இ) கடல் (ஈ) விமானம்

7. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல்
(அ) மின்னணு வணிகம் (ஆ) இணையதளம் (இ) வலைதளம் (ஈ) வர்த்தகம்

8. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை____க்கு வழங்குகிறது. (அ) அதிக விலை
(ஆ) குறைந்த விலை (இ) நியாயமான விலை (ஈ) மிதமான விலை

9. நெறிமுறைகளுக்கான தேவைகள்
(அ) உயர்மட்ட மேலாண்மை (ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
(இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் (ஈ) மேற்கண்ட அனைத்தும்

10. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் _____
(அ) கடனீந்தோர் (ஆ) உரிமையாளர்கள் (இ) கடனாளிகள் (ஈ) இவை எதுவும் இல்லை

11. உற்பத்தி துறையின்கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்சவரம்பு____ லட்சத்திற்கு மிகக் கூடாது. (அ) 10 (ஆ) 20 (இ) 25 (ஈ) 50

12. ______ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
(அ) அரசு பத்திரங்கள் (ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
(இ) பெருநிறுவன பத்திரங்கள் (ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

13. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது
(அ) வெளிநாட்டு வியாபாரம் (ஆ) உள்நாட்டு வியாபாரம்
(இ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஈ) வியாபாரம்

14. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
(அ) மொத்த வியாபாரி (ஆ) உற்பத்தியாளர்
(இ) சில்லறை வியாபாரி (ஈ) வாடிக்கையாளர்கள்

15. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது
(அ) அனுப்புகை இரசீது (ஆ) கப்பல் இரசீது
(இ) கப்பல் துணைத் தலைவர் இரசீது (ஈ) வாணிகத் தூதுவர் இடாப்பு

16. உலக வங்கி அமைந்திருப்பது
(அ) வாஷிங்டன் DC (ஆ) நியூயார்க் (இ) டோக்கியோ (ஈ) ஹாங்காங்க்

17. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை
(அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு (ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
(இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி (ஈ) ஒப்பந்தம்

18. பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?
(அ) வாக்குறுதி வழங்குபவர் மட்டும் (ஆ) வாக்குறுதி வழங்குபவரின் சட்ட பிரதிநிதிகள்
(இ) வாக்குறுதி வழங்குபவரின் முகவர் (ஈ) இவை அனைத்தும்

19. வருமான வரி என்பது
(அ) வியாபார வரி (ஆ) நேரடி வரி (இ) மறைமுக வரி (ஈ) சேவை வரி

20. GST யின் விரிவாக்கம்
(அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி (ஆ) அரசு விற்பனை வரி
(இ) சரக்கு மற்றும் சேவை வரி (ஈ) பொது விற்பனை வரி

## பகுதி - II

**II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும்** **7 X 2 = 14**

21. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22. கர்த்தா என்பவர் யார்?
23. கைப்பேசி வங்கியியல் என்றால் என்ன?
24. தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
25. குறு நிறுவனங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
26. வியாபாரத்தின் பொருள் தருக.
27. சரக்காணை என்றால் என்ன?
28. ஒப்பந்தம் என்றால் என்ன?
29. வருமான வரி என்றால் என்ன?
30. தனி உரிமையியலின் இரண்டு தீமைகளை எழுதுக.

## பகுதி - III

**III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்** **7 X 3 = 21**

31. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன?
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
34. மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்க்கு ஏற்படும் நன்மைகள் யாவை?
35. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் இலக்கணம் தருக.
36. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக.
37. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)
38. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.
39. ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
40. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)

## பகுதி - IV

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **7 X 5 = 35**

41. வணிகத்தின் பல்வேறு தடைகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

42. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
**(அல்லது)** பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)

43. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5) **(அல்லது)**
சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள் யாவை? (ஏதேனும் 5)

44. மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
**(அல்லது)** ஏட்டுக் கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி

45. போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

46. சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
சிறு குறிப்பு வரைக. (அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்
(ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள் (இ) கட்டுமானத் தொழில்கள்

47. பன்னாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி. **(அல்லது)**
துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி (ஏதேனும் 5)